No. of Printed Pages : 7

**3061**

பதிவு எண் | | | | | | |

2811561

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

## (உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம்பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக. 3x4=12

1. தமிழ் மொழியின் மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற்கலைஞர் கடிந்துரைப்பது எங்ஙனம் ?

2. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்துவரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

3. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

4. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப்பற்றி எழுதுக.

5. ஈகைப் பண்பில் தமிழ்மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக. 3x4=12

6. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை ?

7. செல்வம் நிலைபேறு உடையதன்று - என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது ?

8. தோதலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உரைப்பனவற்றை விளக்குக.

9. சோழர் காலத்துச் சிற்பிகளின் திறமையைப் புலப்படுத்துக.

10. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக. 1x6=6

11. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

12. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 2x10=20

13. 'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'பால்வண்ணம்பிள்ளை' அல்லது 'வேலி' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'மண்' அல்லது 'பழிக்குப்பழி' என்னும் சிறுகதையில் நும்மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

'கிழிசல்' என்னும் சிறுகதையில் நேர்மை தவறாத மாணிக்கம் தன் பண்பில் உயர்ந்து வாழ்க்கையில் சிறந்ததாகக் கற்பனைக் கதை எழுதுக.

அல்லது

தனக்கென்று ஒரு வீடு கட்டுகிற பொழுது ஏற்படுகிற இன்னல்களும், அதிலிருந்து மீண்டு கட்டிய புதிய வீட்டில் மகிழ்வான வாழ்க்கை அமைந்ததைப் போல் கற்பனைக் கதை ஒன்று வரைக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகிய வற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1x10=10

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்

கழையிடை ஏறிய சாறும்

பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்

பாகிடை ஏறிய சுவையும்

நனிபசு பொழியும் பாலும் - தென்னை

நல்கிய குளிரிள நீரும்

இனியன என்பேன் எனினும் - தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர்.

-பாவேந்தர் பாரதிதாசன்

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3x2=6

16. Man Proposes God disposes.

17. To the good people world appears good.

18. Time and tide wait for none.

19. One flower makes no garland.

20. Think before you speak.

21. Many thanks for your kind message of greetings.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1x4=4

(அ) நுணலும் தன் வாயால் கெடும்.

(ஆ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

(இ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

அல்லது

'கடல்' அல்லது 'அருவி' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

**குறிப்பு :** காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப்படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஏற்ற விடையை எழுதுக. **5x2=10**

பாண்டிய நாட்டு மன்னன் சீவகனுக்கு மகள் மனோன்மணி. மனோன்மணியைத் தலைவியாகக் கொண்டமையால் நூலுக்கு மனோன்மணீயம் என்பது பெயராயிற்று. லிட்டன் பிரபு என்பார் ஆங்கில மொழியில் எழுதிய 'இரகசிய வழி' என்னும் நூலைத் தழுவி மனோன்மணீயம் நாடகம் இயற்றப்பட்டுள்ளது. ஆகவே இந்நாடக நூலை 'வழிநூல்' என்று கூறலாம், ஆயினும் இந்நூலாசிரியர் தமது கற்பனைத் திறத்தால் 'முதல்நூல்' எனக் கொள்ளும்படி படைத்தளித்துள்ளார்.

மனோன்மணீயம் ஐந்து அங்கங்களைக் கொண்டு உள்ளது. களம் என்னும் காட்சிகள் இருபதைப் பெற்று உள்ளது. இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக் கதை ஒன்றும் இடம்பெற்றுள்ளது. மனோன்மணீயம் நாடகத்தை இயற்றியவர் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை. இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆலப்புழையில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி 1855 - 1897

**வினாக்கள் :**

**16.** மனோன்மணி யார் ?

**17.** எந்த நூலைத் தழுவி மனோன்மணீயம் எழுதப்பட்டது ?

**18.** மனோன்மணீயம் எத்தனை அங்கங்களைக் கொண்டுள்ளது ?

**19.** களம் என்னும் காட்சிகள் எத்தனை உள்ளன ?

**20.** மனோன்மணீயம் நூலின் ஆசிரியர் யார் ?

**21.** மனோன்மணீயம் நூலின்கண் வரும் துணைக்கதை எது ?

**22.** இந்நூல் ஆசிரியர் பிறந்த ஊர் எது ?

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

23. நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன
(வாக்கியப்பிழையைத் திருத்துக)

24. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும் ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன. (தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

25. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான் அறிந்துக் சொல் எனக்கு.
(தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக)

26. இந்த செஞ்சுரி டென்ஷன் நிறைந்தது.
(ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

27. சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தான்.
(மரபு வழுஉச்சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக)

28. பரவை இறையாக பயிரு வகைகளைத் திண்ணும்.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

29. உலை-உளை அல்லது துணி-துனி
(சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் வாக்கியங்களில் அமைத்து எழுதுக)

30. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா ?
(கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக)

31. சந்நிதியில் சகல ஜனங்களும் உபந்நியாசம் கேட்கத் திரண்டிருந்தார்கள்.
(வடசொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

32. கம்பனைக் கற்கக் கற்க அவனது கவிதை தமிழர்கள் கொண்ட இலட்சியத்தை உணர்த்தி அவர்களது பண்பாட்டின் உச்சத்தையும் தொட்டுவிடுதல் நமக்குப் புலனாகின்றது.

(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக)

-o0o-